# பெண்களும் அரசியலும்



**சத்யா,**
நூலகர், அய்டியாஸ், மது



கட்சி அரசியல்தான் “அரசியல்" என்ற தவறான புரிதலால்இன்று பெரும்பாலானோர் “நமக்கு எதற்கு வம்பு" என அரசியல் அறிவு பெறுவதிலிருந்து ஒதுங்கி நிற்கின்றனர்.

“நல்ல அரசியல் தலைவர்களாக ஆவதில் பெண்களும் ஆண்களும் சமம்தான் என்று இந்தியாவில் பெரும்பான்மையோர் கூறுகிறார்கள். ஆண்களை விடப் பெண்கள்தான் சிறந்த அரசியல் தலைவராக ஆகிறார்கள் எனப் பத்தில் ஒரு இந்தியர் நினைக்கிறார்" என்று பியூ (PEW) ஆராய்ச்சி மையம் தெரிவிக்கிறது. இந்தியா முழுவதும் முப்பதாயிரம் பேரிடம் நடத்தப்பட்ட ஆய்வு இது. ஆனால் இந்திய அரசியலில் பெண்களின் பங்கேற்பு..?

தேர்தலில் வாக்களித்து அதன்மூலம் மாற்றத்தை ஏற்படுத்துவது; தேர்தலில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு பெண்களுக்கான பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்துவது; நிர்வாகம் மற்றும் அதிகாரத்தில் பங்கு கொள்வது என இந்தியாவில் அரசியலில் பெண்களின் பங்கேற்பு மூன்று வகையாக உள்ளது.

தேர்தலில் வாக்களித்துத் தாங்கள் விரும்பும் ஆட்சியை ஏற்படுத்துவது என்ற வகையில் பெண்களின் வாக்களிக்கும் சதவிகிதம் சென்ற காலங்களை விடத் தற்போது அதிகரித்திருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் சில தேர்தல்களில் ஆண்களை விடப் பெண்கள் அதிக எண்ணிக்கையில் வாக்களிக்கிறார்கள். ஆனால் தேர்தலில் போட்டியிடும் பெண்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளது. (அதாவது, கடந்த மக்களவைத் தேர்தலில் பங்கேற்ற 50,000 க்கும் மேற்பட்ட வேட்பாளர்களில் வெறும் 8% மட்டுமே பெண்கள் என்று ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான சங்கத்தின் அறிக்கை தெரிவிக்கிறது.) ஆட்சி அதிகாரத்தில் பொறுப்பேற்றுள்ள பெண்களின் எண்ணிக்கை அதைவிட மிகவும் குறைவானது. நாட்டின் மக்கள் தொகையில் பெண்களின் அளவை ஒப்பிடும்போது அதிகாரத்தில் உள்ள பெண்களின் எண்ணிக்கை வருத்தம் தரும் அளவிலேயே உள்ளது.

### அரசியல் பெண்களுக்கானதா?

அடிப்படையில், “பெண்களுக்கு அரசியல் ஆகாது. அரசியல் ஆண்களுக்கானது“ என்று, காலம் காலமாகப் பெண்கள் எண்ணி ஒதுங்கியிருக்கின்றனர். அத்தோடு அரசியல் அறிவு பெறுவதற்கும், அரசியலின் முக்கியத்துவத்தை உணர்வதற்கும் பெண்கள் முன்வரத் தயங்குகின்றனர். இதன் விளைவாக, விடுதலை பெற்ற இந்தியாவிலும் கூட, பெண்களின் அரசியல் ஈடுபாடும் பங்கேற்பும் மிக மிகக் குறைவாகவே உள்ளது. அதுமட்டுமல்லாமல் “அரசியல்" என்றவுடன், நாம் தற்போது பார்க்கின்ற கட்சி அரசியலைத்தான் நடைமுறையில் அரசியல் என்று புரிந்துகொண்டிருக்கிறோம். இது தவறான புரிதல். மாறாக, “அரசியல்" என்பது, ‘மனிதர்களின்விடுதலைக்கு வித்திடுகின்ற ஒரு தலைசிறந்த வழிமுறை’ என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். தனி மனித விடுதலைக்கும், ஒரு சமூகத்தின் விடுதலைக்கும் அரசியலே அடிப்படையானது. சிந்திக்க வைப்பதும், விடுதலைக்கு வித்திடுவதும்தான் அரசியல். கட்சி அரசியல்தான் “அரசியல்" என்ற தவறான புரிதலால்இன்று பெரும்பாலானோர் “நமக்கு எதற்கு வம்பு" என அரசியல் அறிவு பெறுவதிலிருந்து ஒதுங்கி நிற்கின்றனர்.

### விடுதலைக்கான கருவி

ஒரு மனிதன் பெற்றிருக்கும் பலவகைப்பட்ட அறிவில், அரசியல் அறிவுதான் ஆகச்சிறந்தது. ஏனென்றால், அரசியல் அறிவுதான் ஒரு மனிதனை சிந்திக்கத் தூண்டி, பண்படுத்தி, மனித வாழ்வின் உள்ளீடுகளை இன்னும் ஆழமாகப் புரிந்துகொண்டு செயலாற்றத் துணைநிற்கிறது. எனவே, அடிப்படையில்,

அரசியல் அறிவு, மனித வாழ்வின் விடுதலைக்கான ஒரு மாபெரும் கருவி.

## கட்சி அரசியலில் பெண்கள்

ஆணாதிக்கக் கண்ணோட்டம் உள்ள கட்சி அரசியல் அமைப்புகளில் இணைந்து பெண்கள் பணியாற்றும்போது அவர்களைச் சந்தேகக் கண்ணோடு பார்ப்பதும், சந்தர்ப்பம் கிடைக்கும்போது அவர்கள்மீது பழிபோடுவதும் நடக்கிறது. இதற்குப் பயந்தே பெண்கள் அத்தகைய அரசியலில் ஈடுபட முன் வருவதில்லை. அதையும் கடந்து, கட்சி அரசியலில், சில பெண்கள் துணிச்சலுடன் ஈடுபடுகின்றனர். அவர்கள் யார் எனப் பார்த்தால்.. “இந்தியாவின் பல பெண் தலைவர்கள், செல்வந்தர்களாகவும் உயர் சாதியினர் அல்லது பாரம்பரிய அரசியல் குடும்பங்களின் வாரிசுகளாகவும் இருக்கிறார்கள். அவர்களுக்கு அரசியல் வாழ்வைத் தொடங்குவதற்கான சலுகை இருக்கிறது. ஆனால், “சாதாரணப் பெண்களுக்கு, அரசியல் என்பது இன்னும் எட்டாக் கனியாகவே இருக்கிறது“ என்கிறார் லண்டன் கிங்ஸ் கல்லூரியின் சமூக விஞ்ஞானி ஆலிஸ் எவன்ஸ். அதையும் கடந்து சாதாரணப் பெண்கள் கட்சி அரசியலுக்கு வரும் போது, அதிகபட்சமாக அவர்களுக்கு, “மகளிர் அணி“யை நிர்வகிக்கிற பொறுப்புதான் கிடைக்கிறது.

## மகளிர் இடஒதுக்கீடு மாயை:

கட்சி அரசியலில் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்கும் வகையில், மகளிர் இடதுக்கீடு மசோதா நிறைவேற்றப்பட்டது. உள்ளாட்சிகளில் இடஒதுக்கீட்டின் பயனாக 50 சதவிகிதப் பெண்கள் பொறுப்புக்கு வந்தாலும் பெயர் அளவில் மட்டும் தான் அவர்கள் பதவிகளை வகிக்கின்றனர். அவர்களின் குடும்பத்தில் இருக்கின்ற ஆண்களே பெரும்பாலும், அனைத்துக் கட்சி அரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபடு கின்றனர். பல காலமாக ஆணாதிக்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் கட்சி அரசியல் போக்குகளைக் களைய வேண்டுமாயின், அரசியல் பற்றிய சரியான புரிதல் பெண்களுக்குத் தேவை.



2023 நிலவரப்படி, 11.3 சதவிகிதம் நாடுகளில் பெண்கள் தலைவர்களாக உள்ளனர். அல்பேனியா (66.7), பின்லாந்து (64.3), ஸ்பெயின் (63.6), நிகரகுவா (62.5), லிச்சென்ஸ்டீன் (60), சிலி (58.3), பெல்ஜியம் (57.1), மொசாம்பிக் (55.0), அன்டோரா, கொலம்பியா, ஜெர்மனி, நெதர்லாந்து, நார்வே (50) பெண் கேபினட் அமைச்சர்கள் அதிகமுள்ள நாடுகளாகும். இந்தியாவில் அமைச்சர்கள் குழுவில் பிரதமர் மற்றும் 78 அமைச்சர்கள் உள்ளனர். இவர்களில் 29 கேபினட் அமைச்சர்கள், 3 இணை அமைச்சர்கள் (சுயாதீனப் பொறுப்பு) மற்றும் 47 இணை அமைச்சர்கள் உள்ளனர். மத்திய அரசில் 11 பெண் அமைச்சர்கள் உள்ளனர். இது 13 சதவிகிதம் மட்டுமே. அதுமட்டுமல்லாமல், நம்நாட்டில் நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் பிரதிநிதிகளின் எண்ணிக்கையில், 193 நாடுகளில் இந்தியா 144ஆவது இடத்தில் உள்ளது.

## என்ன செய்யலாம்?

இந்தியாவைப் பொருத்தவரை தங்கள் கடமைகளை, பொறுப்புகளை ஒருபோதும் பெண்கள் தட்டிக் கழித்தது இல்லை. “அரசியலில் பெண்கள் பங்கேற்பது” என்பதும் நமக்குப் புதிதல்ல. காலம் காலமாக நாட்டை ஆண்ட பெண்களின் பாரம்பரியமும் வரலாறும் நமக்குண்டு. எல்லாத் துறைகளிலும் துடிப்போடு பெண்கள் முன்வந்து செயல்படுகின்றனர். அதேபோல, அரசியல் பற்றிய சரியான புரிதலைப் பெண்கள் பெற வேண்டும். “அரசியல்” என்பது விடுதலைக்கான சிறந்த கருவி என்பதைப் புரிந்துகொண்டு, பெண்கள் களமாடினால், இந்த நாடு வலிமைமிக்க நாடாக, அனைத்து அடிமைத்தனங்களிலிருந்தும் விடுவிக்கப்பட்ட நாடாகமாறும். அப்படிச் செய்யும்போது,அரசியல், பொருளாதாரம், சமூகம், பண்பாடு என அனைத்துத் தளங்களிலும் அரசியல் சாசனம் வகுத்துத் தந்திருக்கும் உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ளப் பெண்கள் மிகுந்த துணிச்சலுடன் முன் வருவார்கள். அது பெருமளவிலான பெண்களின் அரசியல் பங்கேற்புக்கு வழிவகுக்கும். சமூக மாற்றமே தனிமனித சிந்தனையை மாற்றும். சட்டங்களால் மட்டுமல்ல! சமூகத்தில் ஆண், பெண் இருவரும் இணைந்த போராட்டங்களால் தான் அதைக் கொண்டுவர முடியும்.

ஐ.நா.வின் பெண்களின் செயல் இயக்குநர் நக்சுகா, “பெண்களின் அரசியல் ஈடுபாடு இல்லா மல் எந்த நாடும் முன்னேறாது. பெண்களின் பிரதிநிதித்துவம் இன்னும் தேவை.” என்கிறார். அதனை அனைவரும் உணர்தல் அவசியம்.



நர்மதை நதி மீது சர்தார் சரோவர் அணையைக் கட்டுவதற்கு எதிராக நெடிய போராட்டத்தை முன்னெடுத்தவர். உலக அளவில் அதைப் பேசவைத்தவர் யார்?

9